22nd November 1963]

for admission to Medical Colleges used nativity certificates as if they belonged to Salem district though they actually belonged to other districts and thus were able to get admission?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர சேலம் ஜில்லா நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கி, 30 ஸீட்கள் வரை வேறு ஜில்லாக்காரர்கள் கொண்டு போனதாகவும், கிருஷ்ணகிரி லேடி டாக்டருக்கு ஒரு ஸீட் கிடைத்ததாகவும் அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? வந்திருந்தால், என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியான தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஒரே ஒரு காண்டிடேட் ஆந்திராவிலிருந்து வந்தார். He belongs to the Reddi community அவரும் ஆந்திரா நேடிவிடி சர்டிபிகேட்தான் கொடுத்தார். ஃபால்ஸ் சர்டிபிகேட் எதுவும் கொடுக்கவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கிருஷ்ணகிரி லேடி டாக்டர் ஒரு சீட் வாங்கியிருக்கிறார் என்று சொல்கிறேன். அரசாங்கம் அதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அந்தத் தகவலை மடையிலாகக் கொடுத்தால் கவனிக்கப்படும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, ஒரு டெபுடி ரெஜிஸ்ட்டிரார் 13 ஆண்டு காலமாக சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தும் சேலம் என்று போட்டு தன் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார் என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஒருவர் சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தாலும்கூட, நேடிவ் டிஸ்ட்ரிக்ட் சேலமாக இருந்து இருக்கலாம். ஒரு ஜில்லாக்காரர் வேறு இடங்களில் உத்தியோகம் செய்வதால் அவருடைய நேடிவிடி போய் விடாது.

மருத்துவப் படிப்பு.

* 423 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் மூன்றுண்டுப் பயிற்சிக்குப் பிறகு L.M.P. போன்றதொரு டிப்ளமா கொடுப்பதற்காக அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(இ) இல்லையெனில் கிராமப் புறங்களில் டாக்டர்கள் பற்றுக் குறையை எவ்வாறு தீர்க்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

[22nd November 1963

(இ) கிராமப் பகுதிகளில் உள்ள அரசாங்க மனைகளில் பணியாற்ற G.C.I.M., D.M. and S. டிப்ளொமா பெற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். 1963-64-ல் 500-க்குப் மேற்பட்ட மாணவர்கள் ஹவுஸ் சர்ஜன் தேர்வை முடித்த பிறகு கிராமப் பகுதிகளிலும் பணியாற்ற போதிய டாக்டர்கள் கிடைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்பொழுது நாட்டிலே டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்று அரசாங்கத்திலிருந்துகூட சொல்லுகிறார்கள். இந்த டாக்டர் பற்றாக்குறையைப் போக்க முன்பு இருந்த எல்.எம்.பி. முறையை மீண்டும் அமுல் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர்கள் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரிகள் மூடப்படவில்லை. ரூரல் டிஸ்பென்ஸரிகள் பொறுத்த மட்டில் பை-பார்டைட், ட்ரை-பார்டைட் அக்ரிமெண்டுகள் செய்யப்படுகின்றன. பை-பார்டைட் அக்ரிமெண்ட்படி டாக்டர்களுக்கு சம்பளம் பஞ்சாயத்து யூனியன் கொடுக்கிறது. ட்ரை-பார்டைட் ஒப்பந்தப்படி டாக்டருக்கு சம்பளம் அரசாங்கம் கொடுக்கிறது. பஞ்சாயத்துக்கு கொடுக்க முடியவில்லை என்றால் ரூரல் டிஸ்பென்ஸரி மூடப்படுகிறது. ஆகவே டாக்டர் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுவிட்டன என்பது சரியல்ல.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த டாக்டர்கள் பற்றாக்குறையைத் தவிர்க்க முன்பு எல்.ஐ.எம். படித்த டாக்டர்கள் இருக்கிறார்கள், அவர்களை சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலைக்கு அமர்த்துவது இல்லை. இப்பொழுது சர்க்கார் அதை அனுமதிக்க என்ன கஷ்டம் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குறிப்பாக லைஸன்ஷியேட்டுகளை எடுப்பதில்லை என்று ஒரு பாலிஸியை அடாப்ட் பண்ணச் சொல்லி யூனிவர்சிடியும் கூறி இருக்கிறார்கள். ஆனால் ரூரல் டிஸ்பென்ஸரிக்கு மட்டும் அவர்களை எடுக்கிறோம்.

* 424 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have taken a final decision on the proposal to revive the College of Indian Medicine; and

(*b*) if so, what are the details of the proposal as finalised?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) : The Government have decided to impart instruction in Indian Systems of Medicine at a College proposed to be opened in the Tirunelveli district.

(அ & இ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்கவிருக்கும் ஒரு கல்லூரியில் இந்திய மருத்துவ முறைகளைப் போதனை செய்வதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.